# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விகாரி, மாசி 26, திருவள்ளுவர் ஆண்டு–2051

## 2020 மார்ச் 9, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு."*

*நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.*

## 1. இரங்கற்குறிப்பு

## முன்னாள் உறுப்பினர் திரு. ப. சந்திரன் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. ப. சந்திரன் அவர்கள், 29–2–2020 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. ப. சந்திரன் அவர்கள், 1977–1980 ஆம் ஆண்டுகளில் பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.*

*இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 9

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. கே.பி.பி. சாமி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரண்டாம் முறையாக 2016 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாகச் செயல்பட்டவரும், 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை மீன் வளத் துறை அமைச்சராக பாராட்டக்கூடிய வகையில் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும், அன்பையும் பெற்றவரும், இனிய பண்பும் செயல்திறனும் கொண்டவருமான திரு. கே.பி.பி. சாமி அவர்கள் 27-2-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

### (ஆ) திரு. S. காத்தவராயன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2019 ஆம் ஆண்டு குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவரும், எளிமையும், இனிய பண்பும், கடமை உணர்வும் தன்னகத்தே கொண்டு திறம்படச் செயலாற்றியவருமான திரு. S. காத்தவராயன் அவர்கள்,